



## பேரறிஞர் அண்ணாவின் பெயரில் கட்சி நடத்திக்கொண்டு,

# ஒரே நாடு, ஒரே தேர்தலை எடப்பாடி பழனிச்சாமி ஆதரிப்பது வெட்கக்கேடு!

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக கிறிஸ்துமஸ் விழாவில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**சென்னை,டிச.24-**

**காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் சிறுபான்மை நல உரிமைப் பிரிவு சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'சமத்துவ கிறிஸ்துமஸ்- 2024 பெருவிழா புனித தோமையார் மலை மான்ட்ஃபோர்ட் மேல்நிலைப் பள்ளியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.**

**இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு பொது மக்களுக்கு, கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களைத் தெரிவித்ததுடன் புத்தாடை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கி, சிறப்புரையாற்றினார்.**

**அப்போது, அவர் ஆற்றிய சிறப்புரையின் விவரம் வருமாறு:**

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தின் சார்பாக, சிறுபான்மை நல உரிமைப் பிரிவு சார்பாக நடைபெறும் `சமத்துவ கிறிஸ்துமஸ் நலத்திட்ட விழா'வில் பங்கேற்று, உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். பெருமை அடைகிறேன்.

**பழகிய அழகான தருணங்கள்!**

வழக்கமாக கிறிஸ்துமஸ் விழா என்றுதான் போடுவார்கள். ஆனால், இந்த விழா, `சமத்துவக் கிறிஸ்துமஸ் விழா'வாக இங்கு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. அதற்கு முதலின் என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்குப் பேசிய பாதிரியார் ஏ.எம்.சின்னப்பா அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞருடன் நெருக்கமாகப் பழகியவர். நம் முதலமைச்சருடன் நட்போடு பழகுபவர்.. இங்கே அவர் என்னை வாழ்த்தி இருக்கிறார். அவருக்கு எனது நன்றியைத் தெரிவித்துத் கொள்கிறேன்.

கலைஞரிடத்தில் பாட்டுப்பாடி காண்பித்து, கலைஞரின் பாராட்டைப் பெற்றவர். அவர் பாடுவதில் தான் வல்லவர் என்று நினைத்திருந்தேன். ஆனால், மிமிக்கிரியும் நன்றாகச் செய்கிறார். அதேபோல், நம் அருட்தந்தை ஜோ ஆரோன் அவர்கள் எனக்கு இது `தலை கிறிஸ்துமஸ்' என்று சொன்னார். அதில் ஒரு சின்னத் திருத்தம். இந்த மாவட்டத்தில் நான் கலந்துகொள்கின்ற `தலை கிறிஸ்துமஸ்' என்று எடுத்துக் கொள்ளலாம்.

இந்த வாரத்தில் மட்டும் நான் பங்கேற்கின்ற மூன்றாவது கிறிஸ்துமஸ் விழா இது. சென்ற வாரம் கோவையில் இதேபோன்ற சிறப்பான கிறிஸ்துமஸ் விழாவில் கலந்துகொண்டேன். நேற்று, சென்னை கிழக்கு மாவட்டத்தில் நானும், அண்ணன் பீட்டர் அல்போன்சும் அண்ணன் சேகர்பாபு ஏற்பாடு செய்த கிறிஸ்துமஸ் விழாவில் கலந்து கொண்டோம். இன்றைக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் சார்பாக நடைபெறுகின்ற நிகழ்ச்சியில் பங்கேற்கிறேன்.

இந்த வாய்ப்பை எனக்குத் தந்த காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் மாண்புமிகு அமைச்சர் அண்ணன் தா.மோ.அன்பரசன் அவர்களுக்கும், மாவட்டச் சிறுபான்மை யினர் நல உரிமைப் பிரிவுக்கும் என் நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சரின் சார்பாகவும் என் சார்பாகவும் உங்கள் அனைவருக்கும் என்னுடைய கிறிஸ்துமஸ் தின வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**அன்பு செலுத்தும் விழா!**

கிறிஸ்துமஸ் என்றாலே எனக்குக் கூடுதல் மகிழ்ச்சி ஏற்பட்டுவிடும். ஏனென்றால், எனக்கு விவரம் தெரிந்த காலத்தில் இருந்து, நான் பள்ளி படிப்புப் படித்தது ஒரு கிறிஸ்துவப் பள்ளியில்தான். எழும்பூரில் இருக்கின்ற `டான் பாஸ்கோ பள்ளிக்கூடம்'. அதன்பிறகு, கல்லூரிப் படிப்பு படித்ததும் ஒரு கிறிஸ்துவக் கல்லூரியில்தான். லயோலோ கல்லூரியில் தான்.

எல்லோரிடமும் அன்பு செலுத்துகின்ற ஒரு விழா என்றால், அது கிறிஸ்துமஸ் விழா தான். எல்லா மதங்களுமே அன்பைத்தான் போதிக்கின்றன. ஆனால், மதங்களின் பெயரைச்சொல்லி அரசியல் செய்யும் சங்கிகள் தான் எப்போதுமே வெறுப்பைப் பரப்புவார்கள்.

இப்போது சங்கிகள் மட்டுமல்ல, சங்கிகளின் `ஸ்லீப்பர் செல்'களாக இருக்கின்ற, பொறுப்பில் இருக்கின்ற சிலபேர்கூட இப்போது வெளிப்படையாக வெறுப்புப் பிரச்சாரத்தில் ஈடுபடுகிறார்கள்.



**தி.மு.க கூட்டணிக் கட்சிகள்!**

சமீபத்தில் அலகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர் இஸ்லாமியர்களுக்கு எதிரான கருத்தைப் பேசி இருக்கிறார். அதைக் கண்டித்து, அத்தனை எதிர்கட்சிகளும் ஓரணியில் நிற்கின்றன. அவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி, விவாதம் நடத்த வேண்டும் என்று தி.மு.க சார்பில், தி.மு.க. கூட்டணிக் கட்சிகள், காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளின் எம்.பி-க்கள் எல்லாம் கையெழுத்துப் போட்டு கொடுத்து இருக்கிறோம்.

அந்தக் கடிதத்தில் கையெழுத்துப் போடாத ஒரே கட்சி எதுவென்று பார்த்தீர்கள் என்றால், இங்கு இருக்கின்ற அ.தி.மு.க. கட்சிதான். அந்தப் பிரச்சனையில் மட்டுமல்ல, சமீபத்தில், நாடாளுமன்றத்தில் அண்ணல் அம்பேத்கர் அவர்களை இழிவுபடுத்தும் விதமாக, உள்துறை அமைச்சர் அமித் ஷா அவர்கள் மக்களவையிலே பேசியிருக்கிறார்.

அதற்கு ஒட்டுமொத்த நாடே வெகுண்டு எழுந்தது. கழகம் சார்பாக, இந்தக் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில்கூட ஆர்பாட்டத்தில் ஈடுபட்டோம்.

**மிகப்பெரிய வெட்கக்கேடு!**

இன்றுகூட கழக செயற்குழுவில் அமித்ஷா அவர்களின் பேச்சைக் கண்டித்து, மிகப்பெரிய ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி இருக்கிறோம். நம் தலைவர் அவர்கள் மிகக் கடுமையான ஒரு கண்டனத்தைத் தெரிவித்து இருக்கிறார். ஆனால், அ.தி.மு.க-விடம் சென்று, எதிர்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமியிடம் பத்திரிகையாளர்கள் கேட்டால், அவர் என்ன சொல்கிறார் என்றால், `ஜெயக்குமார் என்ன சொன்னாரோ அதுதான் என் கருத்து' என்று சொல்லியிருக்கிறார். இப்படி யாராவது கருத்து சொல்லிக் கேட்டு இருக்கிறீர்களா? அப்படி ஜெயக்குமார் என்னதான் பேசியிருக்கிறார் என்று சென்று பார்த்தால் `பா.ஜ.க., பின்விளைவுகளைச் சந்திக்கும்' என்று பொத்தாம் பொதுவாகச் சொல்லியிருக்கிறார்.

பா.ஜ.க எப்போதும் தமிழ்நாட்டில் பின்விளைவுகளைச் சந்திக்கும் என்பது ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களுக்கே தெரியும்.

மாநிலங்களின் உரிமைகளையெல்லாம் ஒழித்துவிட வேண்டும் என்று பா.ஜ.க இன்றைக்கு `ஒரே நாடு ஒரே தேர்தல்' திட்டத்தைக் கொண்டு வருகிறது. அதையும் அ.தி.மு.க ஆதரிக்கிறது. `மாநில சுயாட்சி நாயகர்' பேரறிஞர் அண்ணாவின் பெயரை, கட்சிப் பெயரில் வைத்துக்கொண்டு மாநிலங்களுக்கு எதிரான `ஒரே நாடு, ஒரே தேர்தல்' திட்டத்தை எடப்பாடி பழனிச்சாமி ஆதரிக்கிறார் என்றால், இதைவிட ஒரு மிகப்பெரிய வெட்கக்கேடு என்ன இருக்கிறது?

அதுமட்டுமல்ல, புயல் பாதிப்பிற்கு நம் முதலமைச்சர் அவர்கள், `நிவாரண நிதியாக ஒன்றிய அரசிடம் 6 ஆயிரம் கோடி வேண்டும்' என்று கேட்டார். ஆனால், ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்குக் கொடுத்தது எவ்வளவு? வெறும் 945 கோடி.

அம்பேத்கரை பா.ஜ.க. கொச்சைப்படுதினால், அதற்கு அமைதி. சிறுபான்மையினருக்கு எதிராகப் பேசினால், அதற்கும் அமைதி. தமிழ்நாட்டிற்கு நிதி தரவில்லை என்றாலும் அமைதி. அந்த அளவுக்குப் பயம். இதுதான் இன்றைக்கு அ.தி.மு.க-வின் நிலைமை.

**வதந்தியைப் பரப்புகிறார்கள்!**

கழக அரசின் மீது எந்தக் குற்றச்சாட்டையும் அவர்களால் சொல்ல முடியவில்லை. அதனால் தான், வெறும் வதந்தியைப் பரப்பி விட்டுக்கொண்டு இருக்கிறார்கள். சென்ற வாரம் என்னைப் பற்றி ஒரு வதந்தி வந்தது. சனாதனம் பற்றி நான் பேசியதற்காக யாரோ ஒரு சாமியாரை அழைத்து வந்து பரிகாரம் செய்தேன் என்று ஒரு வதந்தி. `என் தலையையே சீவுவேன்' என்றார்கள். `மன்னிப்பு கேள்' என்று சொன்னார்கள். `மன்னிப்பு கேட்க முடியாது' என்று சொன்னேன்.

நீதிமன்றம், நீதிமன்றமாகச் சென்று வழக்குப் போட்டபோது, அதற்கும் நான் பயப்படவில்லை. நான் சென்று பரிகாரம் கேட்பேனா? அந்தச் செயலில் ஈடுபடுவேனா? நான் கலைஞரின் பேரன். சொன்னால், சொன்னதுதான் எனது கொள்கையில் எப்போதும் உறுதியாக இருப்பேன்.

இந்த வதந்திகளைக்கூட, வாயை வாடகைக்கு விடுவார்கள் என்று சொல்வார்கள் இல்லையா, அந்த மாதிரியான ஆட்கள் இதைப் பரப்பிக்கொண்டு இருந்தார்கள்.

பிறப்பால் ஏற்றதாழ்வு என்று சொல்லும், எதையும் எப்போதுமே எதிர்போம். சமத்துவச் சமுதாயம் அமைப்பதுதான் எங்களின் இலக்கு என்பதை மீண்டும் உறுதி செய்திட விரும்புகிறேன்.

இங்கு ஒரு சின்னக் கதையின் வாயிலாக இரண்டு நிகழ்வுகளை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். இங்கு அண்ணன் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசும்போது சொன்னார் இந்தக் கிறிஸ்துமஸ் விழாவை நாமும் கலந்துகொள்கிறோம். எதிர்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி அவர்களும் நேற்று ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு இருக்கிறார், ஒன்றிய பிரதமர் மோடி அவர்களும் கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறார். அவர்கள் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிக்கும் இந்த நிகழ்ச்சிக்கும் ஒரு வித்தியாசம் இருக்கிறது.

**இரண்டு வித நிழல்கள்!**

இந்தச் சின்னக் கதையைக் கலைஞர் அவர்கள் தான் உவமையாகச் சொல்லி இருக்கிறார்.

ஒரு பாலைவனம். அந்தப் பாலைவனத்தில் ஒரு பாம்பு ஊர்ந்து வருகிறது. வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்ததில், மண்ணின் சூடு அதிகமாக இருக்கிறது. அந்தப் பாம்பால் ஊர்ந்து செல்ல முடியவில்லை. உடனே, தன் தலையையும், உடம்பையும் தூக்கிக்கொண்டு வெறும் வாலால் மட்டும் ஊர்ந்து செல்கிறது. அந்தப் பாம்பின் தலை மற்றும் உடம்பின் நிழல் தரையில் படுகிறது. அதில் ஒரு தவளை அந்தப் பாம்பின் நிழலில் வந்து நிற்கிறது. அந்தப் பாம்பு தலையைக் குனிந்து கீழே பார்க்காதவரைக்கும்தான் அந்தத் தவளைக்குப் பாதுகாப்பு. தலையைக் கீழே குனிந்து பார்த்தால், தவளையின் நிலைமை என்னவென்று உங்களுக்குத் தெரியும்.

அதேபோல் இன்னொரு கதை இருக்கிறது. அதே பாலைவனத்தில் ஒரு தாய் மானும், குட்டி மானும் பாலைவனத்தில் நடந்து சென்று கொண்டிருக்கிறது. வெயில் சூட்டினால் அந்தக் குட்டி மானால் நடக்க முடியவில்லை. தாய் மான் ஒருபக்கம் நின்றுகொள்ள, அதனின் நிழல் ஒரு பக்கம் விழும்போது, தன் குட்டி மானை தன் நிழலுக்கு வரவழைத்து, அதற்கு ஓய்வு கொடுக்கிறது.

**கழகத்திற்குத் துணையாக இருங்கள்!**

இரண்டு நிழல்களைப்பற்றியும் உங்களிடம் சொல்லி இருக்கிறேன். பாம்பின் நிழலில் நிற்கும் தவளையைப் போலத்தான் மக்கள் அ.தி.மு.க-வை பார்க்கிறார்கள். ஆனால், தி.மு.க-வை சிறுபான்மை மக்கள் பார்ப்பது தாய் மான் நிழலில் குட்டிமான் இளைப்பாறுவதைப்போலத்தான் தி.மு.க-வை பார்க்கிறீர்கள். இது அன்பால் செய்கின்ற உதவி. இதற்கு ஈடுஇணை எதுவுமே கிடையாது. ஆகவே, திராவிட முன்னேற்றக் கழகம் என்ற இயக்கம் இருக்கின்ற வரை சிறுபான்மை மக்களுக்கு என்றைக்கும் பாதுகாப்பாக இருப்போம்.

உங்களுக்கு அரணாக நிற்கும் கழகத்திற்கு நீங்கள் எப்போதும் அரணாக, ஆதரவாக இருப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

2026-ஆம் ஆண்டுச் சட்டமன்ற தேர்தல் விரைவில் வர இருக்கிறது. இதற்கு உங்களின் ஆதரவு கழகத்திற்கு மிகமிக முக்கியம். எங்களின் கழகத் தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார் `குறைந்தது, 200 சட்டமன்றத் தொகுதிகளில் தி.மு.க வெற்றிபெற்று கூட்டணி ஆட்சி அமைப்போம்' என்று தலைவர் அவர்கள் சொல்லி இருக்கிறார்.

எந்தத் தைரியத்தில் சொல்லி இருக்கிறார் என்றால், சிறுபான்மை மக்கள் நீங்கள் என்றைக்கும் கழகத்திற்குத் துணையாக இருப்பீர்கள் என்ற நம்பிக்கையில். எனவே, நீங்கள் கழகத்திற்கு வாக்களிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு மீண்டும் ஒரு முறை, கிறிஸ்துமஸ் வாழ்த்துகளைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்திப் பேசினார்.

**பங்கேற்றவர்கள்!**

கழகப் பொருளாளர், கழக மக்களவைக்குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, அமைச்சர் தா.மோ. அன்பரசன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ், தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணையத் தலைவர் ஜோ.அருண், சென்னை, மயிலை உயர் வரை மாவட்ட முன்னாள் பேராயர் முனைவர் சின்னப்பா, நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர்.ராஜா, வரலட்சுமி மதுசூதனன்,

கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாநிலச் செயலாளர் மருத்துவர். சுபேர்கான், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மூர்த்தி, ஆர்.டி.அரசு, மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர்கள் படப்பை மனோகரன், மேயர் வசந்தகுமாரி, துணை மேயர் காமராஜ், மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு அமைப்பாளரும், நகர் மன்ற தலைவருமான ஆல்பர்ட், மாவட்டச் சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு நிர்வாகிகள் ஜார்ஜ், ஷாஜகான், அலிசபர், தீபக் சாமுவேல், ராயப்பா, ஆரோக்கியராஜ், ஜாபர் அலி, அல்தாபி உசேன், சந்திரன், குணாளன், பாபு, வந்தேமாதரம், விவேகானந்தன், கழகத் தகவல் தொழில்நுட்ப அணியின் மாநிலத் துணைச் செயலாளர் தமிழ்மாறன், ஆதிமாறன், அன்புச்செல்வன், கீதா ஆதிபூபாலன், சதீஷ், எத்திராஜ்,

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஜானகிராமன், இராமமூர்த்தி, மணிகண்டன், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் சத்தியபிரபு, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பிரபு, மாவட்ட சிறுபான்மை நல உரிமைப் பிரிவு துணை அமைப்பாளர் கிறிஸ்டோபர், மான்போர்ட் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி முதல்வர் ஸ்டீபன் சேவியர், அருட்சகாதரிலாரன்சியா, போதகர் ஜோசுவா ஸ்டீபன் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், கீரனூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் சார்பில், கந்தர்வக்கோட்டை அரசு தொழிற் பயிற்சி நிலையத்தினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு. அருணா, தலைமையில் 18.12.2024 அன்று திறந்து வைத்து, மாணாக்கர்களுக்கு சேர்க்கைக்கான ஆணைகளை வழங்கினார்கள். உடன், கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் அ.அக்பர்அலி, குன்றாண்டார்கோவில் ஒன்றிய குழுத் தலைவர் திருமதி.பாண்டிச்செல்வி கே.ஆர்.என்.போஸ், கீரனூர் பேரூராட்சித் தலைவர் திருமதி.த.ஜெயமீரா ரவிக்குமார், கந்தர்வக்கோட்டை அரசினர் தொழிற்பயிற்சி நிலைய முதல்வர் (பொ) மா. சுந்தரகணபதி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, சேலம் மாவட்டத்தில் சிப்காட் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கு ஜாகீர் அம்மாபாளையத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ள இடத்தினை தொழில்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா நேற்று முன்தினம் (22.12.2024) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் சிப்காட் மேலாண்மை இயக்குநர் செந்தில் ராஜா, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.பெ.மேனகா உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.